1979 மார்ச் 22]

'சைன்டிஃபிக் அகிரிகல்சுரல் ட்ரெயினிங்' போன்ற பயிற்சி தரப்படுகிறது. அப்படி பயிற்சிப் பெற்றவர்களை கல்வி இலாகா 'ரெகக்னைஸ்' செய்யவில்லை என்று சொல்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை நேரடியாகப் போடுங்கள். ஆடுதுறையைப் பற்றியது அல்ல கேள்வி ; மாநிலம் பூராவுக்கும் உள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : ஆகவே, இந்த கால்நடை பயிற்சித் திட்டத்தில் டி.டி.சி. பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கல்வி இலாகா அதை எல்லாம் அங்கீகரிக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அது கல்வி இலாகாவைப் பொறுத்த கேள்வி. தனிக் கேள்வி போட்டால் விவரம் தர முடியும்.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்திற்கு நிதி உதவி.

வினா எண் 512— திரு. சி. மு. வாசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தொழில்கள் தொடங்கும் வகையில் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்திற்கு நிதி உதவி அளிப்பதற்கு அகதிகள் வங்கி ஒப்புக்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) நாமக்கல்லில் எண்ணெய் பிழிவதற்காக துணை ஆலை ஒன்று அகதிகள் வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்று நிறுவும் செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 513— மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வினாக்கள் 513-ம் 514-ம் ஹொகேனக்கல் பற்றியதாக இருப்பதால் இரண்டையும் சேர்த்து எடுத்துக்கொள்கிறேன்.